**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவையாறு**
முன்னிலை: **திரு. ப.இரமேஷ், பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு

2025 ம் ஆண்டு ஜூன் மாதம் 27 ஆம் தேதி வெள்ளிக்கிழமை

**I.A.No.426/2023**
**in**
**I.A.No.427/2023**
**in**
**O.S.No.08/2015**

வனரோஜா ...மனுதாரர்/வாதி

**- எதிர் -**

1. ராமதாஸ்
2. ஜோதிமணி
3. கௌசல்யா
4. சேகர்
5. புருஷோத்தமன்
6. ராணி
7. சுசீலா ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 22.09.2023 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.M.ராஜ் அவர்களும் 1,2 மற்றும் 4,5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.கிருஷ்ணசாமி அவர்களும் 3-ஆம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பழனி அவர்களும் ஆஜராகி விசாரணைக்கு வந்த போது அனைத்துதரப்பு வாதங்களை கேட்டு இருதரப்பு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>பொதுவான உத்தரவு</u>**

1. மனுதாரர் இம்மனுவை வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதி வழங்கக் கோரி உ.வி.ந.மு.ச கட்டளை 6 விதி 17 மற்றும் 151-ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

**<u>2.மனுவின் சுருக்கம்:</u>**

(2.1) இம்மனுதார் அசல் வழக்கில் வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் 3-ஆம் இன சொத்துக்கள் மட்டும் சேர்க்கப்பட்டுள்ளது. 4-வது இன சொத்தை சேர்க்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்தானது வாதியின் அப்பா கலியபெருமாள் அவர்களால் 1986-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ஆம் தேதி அடைக்கலசாமி மனைவி சொரணத்தாம்மாள் என்பவரிடமிருந்து கிரயம் வாங்கி கரந்தட்டாங்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரய ஆவண எண்.1095 -ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

(2.2) மேற்படி சொத்தை அசல் வழக்கில் 4-வது இன சொத்தாக சேர்க்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே அசல் வழக்கின் சொத்து விவரத்தில் 6-வது இன சொத்தாக "தஞ்சாவூர் மாவட்டம், கரந்தட்டாங்கு சார்பதிவாளர் அலுவலகம், அம்மன்பேட்டை கிராமம், புல எண்.59/1-ல் 1-வது அயிட்ட ஸ்தலத்திற்கு கிழக்கு, ராஜேந்திரம் கிராம எல்லைக்கு தெற்கு, தங்களதான மனைக்கும் வீட்டிற்கும், மேற்கு வனரோஜா கிரயம் வாங்கியுள்ள மனைக்கு வடக்கு கிழமேல் 38 லிங்ஸ், தென்வடல் 166 லிங்ஸ் 6308 சதுர லிங்ஸ் கொண்ட காலி மனை ஸ்தலம்" என சொத்தை சேர்க்க உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>1-ஆம் எதிர்மனுதாரர்/1-ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 2, 4, 5, 6, 7 எதிர்மனுதாரர்களால்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>**

(3.1) இம்மனுவில் இந்த எதிர்மனுதாரர்களால் ஏப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற ஏனைய சங்கதிகளை மறுக்கிறார். இந்த மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைநிறுத்தக்கதல்ல என்பதால் இந்த மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும். இந்த மனுவானது சுமார் 8 வருட காலத்திற்கு பிறகும் விசாரணைகள் முடிந்துள்ள பிறகும் இந்த திருத்த மனு தாக்கல் செய்வது எந்த வகையிலும் ஏற்புடையது

அல்ல என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாகும். மனுவில் சொல்லப்பட்டுள்ள 6308- சதுர லிங்ஸ் வாதியின் தகப்பனார் கிரய பத்திர அடிப்படையில் புதிததாக 4-வது இன சொத்தாக சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். ஆனால் இந்த பிரதிவாதிகள் எதிர் வழக்குரை தாக்கல் செய்யும் பொழுதும், முதல் வாதியை குறுக்கு விசாரணையை செய்யும் பொழுதும், பஞ்சாயத்தார்கள் ஏற்பாடு செய்த சமரச உடன் படிக்கையை ஒத்துக் கொண்டு கையெழுத்திட்ட ஆவணத்திலும் இந்த 6308- சதுர லிங்ஸ் சொத்தை சேர்த்து சரியாக பாகம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது அந்த விவரங்கள் எதுவும் தெரியாமல் வழக்குரை தாக்கல் செய்துவிட்டு தற்சமயம் திருத்தம் கோரும் மனு எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும்.

(3.2) அசல் வழக்கு எண்.8/2015– ஆம் ஆண்டு தாக்கல் செய்த வழக்குரையானது திருத்தப்படாமல் இன்றுவரை உள்ளது. அதில் 2-வது இன சொத்தில் பத்திரப்படி அளவுகளை போடாமல் புலப்பட சுவடி (F.M.B) அடிப்படையில் விஸ்தீரணம் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் 6462- சதுர அடி என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பத்திரப்படி 14732 சதுர லிங்ஸ் அதாவாது 6417 சதுர அடிதான் உள்ளது இதில் வாதி பிரதிவாதிகளின் தகப்பனரால் விற்பனை செய்யப்பட்டது 4968 சதுர அடி ஆகும் மீதம் உள்ளது 1449 சதுடி அடி மட்டுமே பாக வழக்கில் கோரமுடியும். அதையும் இந்த மனுதாரர் வாதி 8 வருட காலமாக திருத்தம் செய்யவில்லை. புதிதாக ஒரு இன சொத்தை மட்டும் நான்காவது இனமாக சேர்க்க கோருவது நீதிமன்றத்தினுடைய நேரத்தையும் பிரதிவாதிகளுக்கு மன உளைச்சலை ஏற்படுத்துவதற்காக இந்த திருத்தம் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த திருத்தம் மனு தள்ளுபடி செய்ய வேண்டியது ஒன்றாகும்.இந்த வழக்கின் மனுதாரர்/வாதி ஆரம்ப முதலே தவறாக வழக்கை தாக்கல் செய்துவிட்டு ஒவ்வொன்றாக 8 வருடம் கழித்து பரிகாரம் கேட்கமுடியா என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும்.

(3.3) பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடமும் தவறானதாகும் அந்த

வரைபடமும் பிராதில் காட்டப்பட்டுள்ள இரண்டாவது இன சொத்தும் கட்டாயம் திருத்தம் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும் இவ்வாறு சொய்யாமல் தற்பொழுது பிராதில் விடப்பட்ட வாதி பிரதிவாதியின் தகப்பனரால் கிரயம் பெற்ற பத்திரத்தில் காண்பிக்கப்பட்டுள்ள இரண்டாவது இன சொத்தை 6308 சதுர விங்ஸ் அதாவது 2748 சதுரடியை பிராதில் 3 வது இன சொத்தானது இந்த முதல் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்தாகும். இந்த தனிப்பட்ட சொத்தை பொறுத்து இடைநிலை மனுவில் விசாரணை செய்த நீதிமன்றம் இந்த இடைநிலை மனு தீர்ப்பில் பிரதிவாதியின் கட்சியை ஊர்ஜீதம் செய்து வாதியால் போடப்பட்ட வழக்கில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதனால் 3 வது இன சொத்தானது பிராதில் நீக்கம் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். எனவே கனம் கோர்ட்டார் அவர்கள் எந்த கோணத்தில் பார்த்தாலும் திருத்தம் செய்ய கோரும் மனு எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல என்பதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என பிரார்த்திக்கின்றார்.

4.தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் அசல் வழக்கில் சாட்சி விசாரணை துவங்கிய பிறகு வழக்குரை சொத்து விபரத்தில் கூடுதலாக ஓர் சொத்தை சேர்ப்பதற்கு வழக்குரையில் திருத்தம் செய்ய கோரும் மனு அனுமதிக்கதக்கதா என்பதே ஆகும்.

**<u>5. தீர்வு</u>**

(5.1) அசல் வழக்கானது 2015-ஆம் ஆண்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 12.09.2015 அன்று எழுவினாக்கள் வனையப்பட்டு, சாட்சி விசாரணை துவங்கி வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணை நிலுவையில் இருந்தபோது தாவா சொத்தில் கூடுதலாக ஒரு சொத்தை சேர்க்க ஏதுவாக வழக்குரையில் திருத்த கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியானவர் தனது தந்தை கலியபெருமாள் என்பவரால் கிரயம் பெற்ற சொத்தை மேற்படி அசல் வழக்கில் சேர்க்காமல் விட்டுவிட்டதாகவும் அதை இவ்வழக்கில் சேர்க்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.பாக

பிரிவினை வழக்கினை பொறுத்தவரை அனைத்து சொத்துக்களும் சேர்க்கப்படவேண்டும் தாவா வழக்கில் சொத்துக்கள் சேர்க்கப்பட்டுவிட்டதால் மட்டும் அந்த சொத்து பாகபிரிவினைக்கு உட்பட்டது என்று முடிவு செய்ய இயலாது.

இறுதியான விசாரணைக்கு பின்பு தான் வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதா என்றும் முடிவு செய்ய இயலும். எனினும் தரப்பினர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களும் வாதி மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் கலியபெருமாள் அவர்களால் அடைந்த சொத்துக்கள் அனைத்தும் பாகபிரிவினை வழக்கில் சேர்க்கப்படவேண்டியது அவசியமாகும்.

மேற்கண்ட சூழலில் வழக்கின் தன்மை மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று தீர்வு காண்கிறேன். எனவே இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஜூன் 27 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2025.06.27 18:33:23 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**திருவையாறு**

**இணைப்பு:**

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை**

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2025.06.27 18:33:34 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**திருவையாறு**